மில்க்வைற் இலவச வெளியீடு: மறுபிரசுரம்

உ

சக்திமயம்



# துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி நவராத்திரி பூஜாமலர்


வெளியிடுவோர்:

சிவதர்மவள்ளல், சமாதான நீதவான்

க. கனகராசா அவர்கள்

(மில்க்வைற் தொழிலதிபர்)

திருஆலவாய் — யாழ்ப்பாணம்.



1986

உ

சக்திமயம்



துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி

# நவராத்திரி பூஜா மலர்


தொகுத்தவர்:

**க. சி. குலரத்தினம்**



வெளியிடுவோர்:

*சிவதர்மவள்ளல், சமாதான நீதவான்*

**க. கனகராசா அவர்கள்**

*மில்க்வைற் தொழிலதிபர்*

திருஆலவாய் - யாழ்ப்பாணம்.

1986

# சக்தி வணக்கம்

''ஒன்றாகி யைந்தொழிற்கு மைந்துவித மூற்றுயிரு
ணின்றாள் பொற்பாத நினைவாம்''.

— சைவசமய நெறி

சிவபெருமானோடும் வேற்றுமையின்றி ஒரு முதலாகி பஞ்சகிருத்தியத்தின் பொருட்டுப் பஞ்சசக்தி பேதங்களைப் பொருந்தி, சர்வான்மாக்களிடத்தும் வியாபித்து நின்ற சிவசக்தியினுடைய பொலிவாகிய திருவடிகளைத் தியானிப்பாம்.

வெளியில் தெரியாத தேவி, மகாகாளி உருவெடுத்து உலகைப் படைக்கின்றாள். இலக்குமியாக எழுந்தருளி வந்து உலகத்துக்கு வளத்தையும், செல்வத்தையும் கொடுக்கின்றாள். சரஸ்வதியின் திருவுருவத்திலிருந்து அறிவைக் கொடுக்கின்றாள்.

தேவனும், தேவியும் வாக்கும் அர்த்தமுமாக இருக்கின்றார்கள். தேவி ஓங்காரம் என்னும் கூட்டில் கிளிபோல் இருக்கிறாள். சர்வசைதன்ய வடிவமாயும் ஆதிவித்தையாயும் தேவி நிலவுகின்றாள். அவள் எங்கள் புத்தியைத் தூண்டிக் கொண்டே இருக்கிறாள்.

பரப்பிரமத்தை ஒத்திருக்கும் மகாசக்தியைச் சண்டிகா தேவி என்று தந்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. தமிழ் நாட்டிலும், ஈழத்திருநாட்டிலும் தமிழர் சரஸ்வதி தேவி என்னும் நாமகளையே வழிபடுகிறார்கள். கல்வியாளர்கள், கலைஞர்கள், உழவர்கள், நெசவாளர் முதலானோர் நாமகளையே நவராத்திரி நாயகி எனப் போற்றுகிறார்கள். சரஸ்வதியின் திருவருள் வாழ்வுக்கு இன்றியமையாதது எனக் கண்டு வணங்கிவருகிறார்கள்.

அறியாமை, மிருகத்தன்மை, மந்தபுத்தி, அசுரப்போக்கு முதலியவற்றிலிருந்து நம்மைக் காத்தருள்புரிபவள் தேவி. தேவி தாய்மையின் சொரூபமாயுள்ளவள். அஞ்ஞான இருளை நீக்கும் ஞானம்பிகை அவளே. நவராத்திரி விரதமும் விழாவும் ஒன்பது நாட்களோடு முடிவதில்லை. அடுத்தநாள் விஜய தசமி விழாவோடுதான் சக்தி பூஜை முடிவடைகிறது. பத்து நாட்களில் முடிவடைவதால் இவ்விழாவைத் தசரா எனவும் வழங்குவர்.

இந்த விழாவைச் சைவர், வைணவர் ஆகிய இரு திறத்தாரும் வித்தியாசம் பாராட்டாமல் கொண்டாடுகின்றார்கள். இந்திய முகமதியர்களும் இதனை முன்னர் கொண்டாடியதாக குலாம் ஹுசேன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார், நவராத்திரி விழா எல்லோருக்கும் ஏற்றம் அளிக்கும் பெருவிழாவாகும். சுருங்கச் சொல்லில் அறியாமையை வென்று அறிவைப் பெறவும் தீமையை வென்று நன்மையைப் பெறவும் பெருவிழாவாக நடைபெற்றுவருவது நவராத்திரி விழாவாகும்.

தாயாகிய ஞானம்பிகையைத் துர்க்கா பரமேஸ்வரி எனவும் வழங்குவர். அஞ்ஞானத்தின் பல வடிவங்களான அரக்கர்களை அழித்தவள் அவள். மது-கைடபவ வதத்துக்குக் காரணமாயிருந்தவள் காளி. மகிடாசுரனை வென்றழித்தவள் மகாலட்சுமி, சும்பன், நிசும்பனை அழித்தவள் சரஸ்வதி.

நவராத்திரி நாயகி எல்லாம் வல்ல சக்தி. அவளின் தாயன்பு வீரமாகப் பரிணமித்து நம்மைக் காத்தருள் புரிகின்றது. அவள் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என மூன்று வடிவமானவள். "துர்க்கா, லக்ஷ்மீ, சரஸ்வதீப்யோ நம" என்பது பூஜா மந்திரம்.

சரஸ்வதி வரமளிப்பவள், தாமரையில் இருப்பவள், பாபங்களைப் போக்குபவள், சுத்தமானவள், எல்லாமாக இருப்பவள், பிரகாசமுள்ளவள், வாக்குக்குத் தேவியாக இருப்பவள், மங்களமாயிருப்பவள், வித்தியாரூபிணியான

வள், தாயாக இருப்பவள், கலையைத் தரிப்பவள், வெண்மை யான திருமுகமுள்ளவள். அறம், பொருள், இன்பம், வீடு அளிப்பவள்.

"உலக மாதாவான சரஸ்வதியே! அண்டியவர்கள் கேட்கும் வரங்களை நல்கும் தேவரீர், அடியேன் பக்தியுடன் அளித்த பூசையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்" என்று பூசைமுடிவில் கேட்டுக்கொள்ளலாம்.

கந்தமடம். **க. சி. குலரத்தினம்**
யாழ்ப்பாணம். 1982

உ
சக்திமயம்

வடமொழியில்

# சரஸ்வதி வணக்கச் சுலோகங்கள்

## காயத்ரி ஆவாகனம்

## காயத்ரி தேவியை எழுந்தருளப் பிரார்த்தித்தல்

காயத்திரியே! நீயே பிராண சக்தியாகவும்
இந்திரிய சக்தியாகவும் இருக்கின்றாய்.
சத்துருக்களை வெல்லுந் திறமையாக இருக்கிறாய்.
தேவர்களின் பிரகாச வடிவாய் இருக்கிறாய்.
உலகவடிவாய் எங்கும் எழுந்தருளியுள்ளாய்.
கலாரூபியாக உலகின் ஆயுளாயும் இருக்கிறாய்.
எல்லாமாய் எல்லோரின் ஆயுளாயும் இருக்கிறாய்.
அனைத்தையும் வென்றவளாயும் இருக்கிறாய்.

பிரணவப் பொருளான காயத்ரியே!
உன்னை எழுந்தருளப் பிரார்த்திக்கின்றேன்.
சாவித்ரியே! உன்னை எழுந்தருளப் பிரார்த்திக்கின்றேன்.
சரஸ்வதியே! உன்னை எழுந்தருளப் பிரார்த்திக்கின்றேன்.

பக்தியுடன் பரவிப் படைக்கும்
இவற்றை ஏற்றருள்வாயாக.
இப்புகழ்மாலையை விருப்பத்தோடு
ஏற்றருள் வாயாக.
என்றும் எங்களை உன்திருக்கடைக்
கண்ணுற் காத்தருள்வாயாக.
நிழல் தரும் பெரும் மரமென
உன் திருவடியை அடைந்தோம்.

— இருக்குவேதம்

என்றும் இனியவற்றைச் சிந்தை செய்வேனாகுக.
என்றும் இனியவற்றையே செய்வேனாகுக.
என்றும் எவர்க்கும் இனியவை இயற்றுவேனாகுக.
என்றும் இனிய சொற்களைப் பேசுவேனாகுக.
என் வார்த்தை தேவர்க்கும் மனிதர்க்கும் இனியதாகுக.
தேவர்கள் என்னை ஆசீர்வதிக்கச் செய்வாயாக.
என்முன்னோர் என்னை ஊக்கப்படுத்தச் செய்வாயாக.

— யசுர்வேதம்

தூய்மை செய்வாள் சரஸ்வதி.
வளங்கள் நிறைந்தவள் சரஸ்வதி.
கருப்பொருளாவாள் சரஸ்வதி.
வேள்வியைத் தாங்குவாள் சரஸ்வதி.
உண்மையைத் தூண்டுவாள் சரஸ்வதி.
ஒளிபெறச் செய்வாள் சரஸ்வதி.
அறிவைத் தெளிவுசெய்வாள் சரஸ்வதி.
அறிவுத் துறையை ஆள்பவள் சரஸ்வதி.
அடியேனுக்கு ஊக்கமளிப்பாள் சரஸ்வதி.

— அஸ்வினி தேவர்

குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அழித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! 1
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்

தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 7

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே! 10

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் காசுத்தாள்கள்போல் பெறுமதிவாய்ந்தவை. அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த பொருட்களை வெகுமதியாகப் பெறுங்கள்.

## பரிசு விபரம்

| | |
|---|---|
| 1. மில்க்வைற் செய்தி 1<br>அல்லது<br>வெளியீடுகளில் 1<br>அல்லது<br>யோகாசனப்படம்<br>அல்லது<br>அழகிய ஸ்ரிக்கர் | நீலசோப் உறை 10 அல்லது<br>நீம்சோப் உறை 2 ,,<br>பார்சோப் உறை 2 ,,<br>மெடிக்கேட்டட் உறை 2 ,,<br>சலவைப்பவுடர் உறை 2 ,,<br>சுப்ப மில்க்வைற் உறை 2 ,, |
| 2. அப்பியாசக் கொப்பி 1 | — நீலசோப் உறை 25 அல்லது<br>சுப்ப மில்க்வைற் உறை 5 |
| 3. பொலித்தீன் பை<br>அல்லது<br>பனைஓலைத் தொப்பி<br>அல்லது<br>சுவாமிப்படம்<br>அல்லது<br>அழகிய கைலேஞ்சி 1 | நீலசோப் உறை 100 அல்லது<br>நீம்சோப் உறை 10 ,,<br>பார்சோப் உறை 10 ,,<br>மெடிக்கேட்டட் உறை 10 ,,<br>சலவைப்பவுடர் உறை 10 ,,<br>சுப்ப மில்க்வைற் உறை 10 |
| 4. பாடசாலைப்பை (School Bag) | — நீலசோப் உறை 200 |
| 5. பெரிய துவாய் 1 | — நீலசோப் உறை 500 அல்லது<br>சுப்பமில்க்வைற் உறை 25 |
| 6. காந்தி சிலை 1<br>அல்லது<br>அழகிய பெட்டீட் 1 | நீலசோப் உறை 1000 அல்லது<br>சுப்ப மில்க்வைற் உறை 50 |

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23233

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002